<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 6-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர் நடராஜன் | வயது | : | 67 |
| தந்தை/கணவர் பெயர் | : | கல்யாணசுந்தரம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 26.10.2021-ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது சிதம்பரம் மாரியம்மன்கோயில் தெருவில் ஆர்.கே. நர்சிங் ஹோம் நடத்தி வருகிறேன். கடந்த 03.05.2014 ஆம் தேதி காலை 10.45 மணியளவில் நான் மருத்துவமனையில் இருந்தபோது 5 நபர்கள் ஆட்டோவில் வந்து இறங்கினார்கள். அதில் 1 நபருக்கு முகம், கை, கால் உடம்பு ஆகிய இடங்களிலிருந்து இரத்தம் சொட்டியது. அதில் 2 நபர்கள் மட்டும் அடிபட்ட நபரை உள்ளே அழைத்து வந்தார்கள். நான் காயமடைந்த நபரை விசாரித்தபோது அவர் மாரியப்பா நகரில் தன் வீட்டில் கேஸ் வெடித்து விட்டதாகவும், அதில் காயம் பட்டதாகவும் கூறினார். பின்பு அந்த 2 நபர்களும் ஏடிஎம் சென்று பணம் எடுத்து வருவதாக கூறிவிட்டு சென்று விட்டார்கள். நான் காயம் பட்ட நபரை விசாரித்ததில் அவர் தன் பெயர் மோகன்ராம் என்றும், திண்டுக்கல்லை சேர்ந்தவர் என்றும் கூறினார். பின்பு அவருக்கு சிகிச்சை கொடுக்க பஞ்சை எடுத்து துடைத்தபோது அவர் உடல் மற்றும் முகம், கண், கை, கால்கள், ஆகிய இடங்களில் அரை இன்ச் ஆணிகளும், மற்றும் பால்ரஸ் உடலில் இருப்பது தெரியவந்தது. நான் அவருக்கு முதலுதவி அளித்து 108 ஆம்புலன்ஸ் மூலம் ராஜா முத்தையா மருத்துவ கல்லூரிக்கு அனுப்பி வைத்தேன். இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். அதில் நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன். இது குறித்து அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 7-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவி | வயது | : | 52 |
| தந்தை/கணவர் பெயர் | : | கணபதி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 26.10.2021-ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

பிரதம விசாரணை - நான் தற்போது திருப்பாப்புலியூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். சம்பவ காலத்தில் நான் அண்ணாமலை நகர் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது 19.09.2014 அன்று நிலைய குற்ற எண். 125/2014 ல் வழக்கில் கண்ட சொத்துக்களான சிறுசிறு துகள்களாக வெடித்து சிதறிய துகள்கள், அரை இன்ச் ஆணிகள், தரையில் சேகரிக்கப்பட்ட மண்துகள்கள், வெடித்த நிலையில் உள்ள வெடிகுழாய், கண்ணாடி துண்டுகள், கரி துகள்கள் ஆகிய 8 பார்சல்களாக கொடுக்கப்பட்டது. Empty Gase மற்றும் ரிவால்வர் மற்றும் 3 தோட்டாக்களும் கொடுக்கப்பட்டது. இரத்தம் தோய்ந்த பஞ்சு ஆகியவற்றை நீதிமன்ற நடுவர், சிதம்பரத்தில் பெற்று விழுப்புரம் தடய அறிவியல் ஆய்வகத்தில் 19.09.2014 ல் பெற்று 22.09.2014 ல் விழுப்புரத்திலும் 23.09.2014 ல் சென்னை மயிலாப்பூரிலும் ஒப்படைத்து ஒப்புதல் பெற்று ஒப்புதல் கடிதங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை